**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 03-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.2-ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.ஜி.அசோக் பிரசாத், பி.ஏ., பி.எல்., எம்.எஸ்.இ.என்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**(வாதி ஆஜர் இல்லை. 1 முதல் 8 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)**

அ.வ.எண்.322/2021

வா.சா.2 சின்னசாமி

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1. வழக்கு சொத்துக்கள் என் மனைவிக்கு எந்த வகையில் பாத்தியம் என்றால் என் மனைவி பெயரில் வாங்கிய சொத்துக்கள் ஆகும். 2009ம் வருடம் முருகவேல் என்பவரிடமிருந்து தாவா சொத்துக்களை கிரயம் பெற்றேன். என் பெயரிலோ, என் மனைவி பெயரிலோ வழக்கு சொத்துக்களை தவிர இதர சொத்துக்கள் எதுவும் இல்லை.

2. எனக்கு டையிங் பேக்டரி இருந்தது. தற்போது வேலைக்கு சென்று கொண்டிருக்கிறேன். டையிங் பேக்டரி 2020ம் ஆண்டு வரை நடத்தி வந்தேன். அந்த டையிங் பேக்டரியில் 8 பேர் வேலை செய்தார்கள். அதில் ஆண்டு வருமானம் சுமார் ரூ.20,00,000/- வரும். ரூ.20,00,000/- வருமானம் வந்ததற்குண்டான வரவு, செலவு கணக்குகளை அந்த காலகட்டத்தில் பராமரித்து வந்தேன் என்றால் சரிதான். வரவு, செலவு கணக்குகளைப் பொறுத்து நான் கணக்கு புத்தகங்கள் மூலம் முறையாக பராமரித்து வந்தேனா என்றால் இல்லை.

3. 2009 முதல் 2020 வரை ரூ.2,00,000/-க்கு மேல் வருமானம் வந்தால் வருமான வரி கட்டவேண்டும் என்பது அரசின் விதி என்றால் சரிதான். 2009ம் வருடம் தாவா சொத்தை முருகவேலிடம் கிரயம் பெறும் போது அதன் சந்தை மதிப்பு எவ்வளவு என்றால் எனக்கு தெரியவில்லை. முருகவேலிடம் வாங்கிய கிரய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

4. 2009ம் ஆண்டு முதலே சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று வருவது எனது வழக்கம் அதிலுள்ள நடைமுறை விவரங்கள் எனக்கு தெரியும். 2009ம் ஆண்டில் எனது மனைவி பெயரில் என்ன கிரயம் மதிப்பு காட்டி கிரயம் பெறப்பட்டது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கும், எனக்கும் எதாவது வரவு, செலவு இருந்ததா என்றால் சுமார் 4 வருடங்களாக இருந்தது. அதன் காலகட்டங்கள் என்ன என்று எனக்கு தெரியாது.

5. 1ம் பிரதிவாதியிடம் வெள்ளை துணியாக கொடுத்து அதற்கு கலர் பிலீச் செய்து கொடுக்க கூலி தொகையாக 1ம் பிரதிவாதியிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படும். 1ம் பிரதிவாதி எனக்கு பணத்தை என் கையிலே கொடுத்துவிடுவார். நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பேங்க் ஆப் இந்தியாவில் வங்கி கணக்கு பராமரித்து வருகிறேன். அது எப்போது தொடங்கப்பட்டது என்பது ஞாபகமில்லை.

6. இன்றைய தேதிவரைக்கும் எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் வங்கி பணப்பரிவர்த்தனை எதுவும் கிடையாது என்று சொன்னால் சரிதான். 2009ல் என் மனைவி பெயரில் கிரயம் பெற்ற தாவா சொத்தின் மதிப்பு தற்போது உள்ள சந்தை மதிப்பில் கூடியுள்ளது என்றால் சரிதான். 2009ல் இருந்து கிரயம் கொடுத்த பிறகு முருகவேல் பெயரில் தான் தண்ணீர் வரி, வீட்டு வரி, மின் வரி மற்றும் அனைத்து வரிகளும் அவர் பெயரில் தான் உள்ளது. 2009ல் கிரயம் வாங்கியது முதல் 2012 வரை முருகவேல் பெயரில் தான் அனைத்து வரிகளும் இருந்தது என் மனைவில் பெயரில் மாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

7. 21.09.2012 தேதியிட்ட கிரய ஆவணத்தில் சொத்து விவரங்கள் மூல ஆவணங்கள் நான் கொடுத்தேன். அதிலுள்ள சரத்துக்கள் பற்றி யார் கூறினார்கள் என்ற விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் இளங்கோவன் மூலம் தெரிந்து கொண்டேன். அவர் தயார் செய்து கொடுத்தார்.

8. சார்பதிவாளர் அலுவலகம் சென்று முறையாக கிரய ஆவணம் பதிவு செய்யப்பட்டு அதில் என் மனைவி கையொப்பமிட்டார், நான் சாட்சி கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். கிரய ஆவணத்திலுள்ள சங்கதிகளை சார்பதிவாளர் முன்பு படித்து காண்பிக்கப்பட்டு அவர் முன்னிலையில் கிரய ஆவணத்தில் கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். கிரய

ஆவணத்தை ரூ.10,00,000/- கடனுக்காக கொடுத்தேன். அது 1.50 வட்டிக்கு கொடுத்தார். மேலும் பிரதிவாதி ரூ.10,00,000/- மற்றும் அதன் வட்டியை திருப்பி கொடுக்கும் போது கிரய ஆவணத்தை திருப்பி தந்துவிடுகிறேன் என்று கூறினார். அதனடிப்படையிலேயே கிரயப்பத்திரத்தை பிரதிவாதியிடம் கொடுத்தேன்.

9. மேற்படி கிரய ஆவணத்தில் மேற்கண்ட சங்கதிகள் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேலும் ரூ.10,00,000/- மற்றும் வட்டி தொடர்பாக வேறு எதாவது ஆவணம் பராமரித்து உள்ளதா என்றால் இல்லை. 21.09.2012 உள்ள கிரய ஆவணத்தில் தங்கவேல் மற்றொரு சாட்சி கையொப்பம் இட்டுள்ளார். வழக்கு போட்ட தேதியிலிருந்து இன்றுவரை நான்தான் இந்த வழக்கை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். அனைத்து வாய்தாக்களுக்கும் நீதிமன்றத்திற்கு வந்து சென்று கொண்டிருக்கிறேன்.

10. சாட்சி கையொப்பம் இட்டுள்ள தங்கவேலுக்கும், எனக்கும் முன்விரோதம், சண்டை சச்சரவு இல்லை என்றால் சரிதான். 21.09.2012ம்தேதி கிரய ஆவணத்தில் கையொப்பமிடுவதற்கு எவ்வித ஆட்சேபணையும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இன்றைய தேதிவரை 1ம் பிரதிவாதியின் நிறுவனம் ஏமாற்றி கிரயம் பெற்றதாக காவல் துறையிலோ அல்லது வேறு அலுவலகங்களிலோ எவ்விதமான புகார்களும் அல்லது இந்த வழக்கை தவிர நீதிமன்றங்களில் வேறு வழக்குகள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

11. 2012ம் வருடம் கிரயம் ஏற்பட்ட பிறகு தான் சுமார் 9 வருடங்கள் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். 2009ம் ஆண்டு என் மனைவி வாங்கும் போது ரூ.4,77,000/- மதிப்பு குறிப்பிட்டு கிரயம் வாங்கினேன். என் மனைவி வாங்கிய கிரயத்தை 2012ல் ரூ.9,60,000/-க்கு கிரயம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

12. 2010 முதல் 2012 வரை வியாபாரத் தேவைக்காக பணம் தேவைப்பட்டது என்றால் சரிதான். இன்றைய தேதிவரை வேறு எந்த நபரிடமும் கடன் வாங்கி பழக்கமில்லை. வட்டி செலுத்தியதற்கான வரவு செலவு கணக்குகள் என்னிடம் உள்ளது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். உரிய பிரதிபலன் ஏற்பட்டு நானும், எனது மனைவியும் வழக்கு

சொத்தை கிரயம் கொடுத்துவிட்டு தற்போது தாவா சொத்துக்கள் மதிப்பு கூடியதால் 9 வருடங்கள் கழித்து பொய்யாக பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13. 5 முதல் 8 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்று சொன்னால் சரியல்ல. என் மனைவி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே இளங்கோவன் இறந்துவிட்டார். இளங்கோவன் இறந்துவிட்டார் என்பதற்கு வழக்கறிஞர் அறிவிப்போ அல்லது கடிதமோ அனுப்பி கேட்டேனா என்றால் இல்லை.

14. 06.12.2020 பெருந்தொற்று கோவிட் காரணமாக அரசு பொது முடக்கம் ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். அன்றையதினம் பிரதிவாதிகள் மற்றும் சில நபர்கள் ஒன்று கூடி என்வீட்டில் பிரச்சனை செய்தார்கள் என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல.

15. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் பொய்யானவை என்பதாலும், தாவா சொத்தை கைப்பற்றுவதற்காகவே நானும், என் மனைவியும் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.